## அந்தரத்தில் தொங்கும் தண்டவாளம் ரயிலில் தவிக்கும் 500 பயணிகள்

ஸ்ரீவைகுண்டம் 70 செ.மீ மழை கொட்டியதால் தாதன்குளம் அருகே வெள்ளம் ஏற்பட்டு, மண் அரிப்பால் தண்டவாளத்தின் கீழ் இருந்த தரைப்பகுதி முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இதனால் ரயில்வே தண்டவாளம் எந்த பிடிமானமும் இல்லாமல் அந்தரத்தில் தொங்குகிறது. இதனால், சென்னையில் இருந்து திருச்செந்தூர் சென்று கொண்டிருந்த செந்தூர் எக்ஸ்பிரஸ் விரைவு ரயில் ஸ்ரீவைகுண்டம் அருகே நிறுத்தப்பட்டது.அந்த ரயிலில் இருந்த 100க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டு பள்ளிகளில் தங்கவைக்கப்பட்டனர். அருகில் உள்ள நாசரேத், குரும்பூர், காயல்பட்டினம், ஆறுமுகநேரி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வாகனம் மூலம் தங்களது உறவினர்களை அழைத்துச் சென்றனர். ஆனால் வெளியூர்களில் இருந்து வந்த பயணிகள் சுமார் 500 பேர் நாள் முழுவதும் ரயிலில் செய்வதறியாது தவித்தனர். அவர்களுக்கு விமானப்படையில் ஹெலிகாப்டர் மூலம் உணவு வழங்கப்பட்டன. இவர்கள் அனைவரும் இன்று மீட்கப்படுவார்கள்.

## சீரான மின்சாரம் வழங்க சிறப்பு குழு களப்பணியில் 5 ஆயிரம் பேர்

### அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி

நெல்லையில் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நிருபர்களிடம் கூறியதாவது: பொது மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாத வண்ணம், பாதுகாப்புடன் கூடிய சீரான மின்சாரம் வழங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இம்மாவட்டங்களிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அடிப்படையில் துரிதமாக மின்சாரம் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. 4 மாவட்டங்களிலும் துணை மின்நிலையங்கள் சேதமடைந்து உள்ளது. பாதிப்படைந்த பகுதிகளில் மின்சாரம் சீரமைக்கும் பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள பொறியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் உள்ளடங்கிய 5 ஆயிரம் பேர் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். கன மழையின் காரணமாக சேதமடைந்த மின் கம்பங்கள், மின்மாற்றிகள் உள்ளிட்ட உபகரணங்களின் சேதங்களை மதிப்பீடு செய்து, அவற்றை விரைவாக சரிசெய்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரத்தினை சீரமைக்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு, பின்வரும் 3 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## தாமிரபரணியில் நீர் திறப்பு குறைப்பு

வற்றாத ஜீவநதி என்று அழைக்கப்படும் தாமிரபரணியில் நேற்று பாபநாசம், மணிமுத்தாறு ஆகிய அணைகளில் இருந்து ஒரு லட்சம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. மழை நேற்று காலையிலேயே நின்றதால், தண்ணீர் திறப்பு படிப்படியாக குறைந்து நேற்று இரவு மொத்தமாக 15 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது. அதில் மணிமுத்தாறில் இருந்து 10 ஆயிரம் கன அடியும், பாபநாசம் அணையில் இருந்து 5 ஆயிரம் கன அணியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், இன்று காலை முதல் பெரும்பாலான பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீர் படிப்படியாக குறையும் என்று தெரியவந்துள்ளது.

## வெள்ளத்தில் சிக்கிய ஐஏஎஸ் அதிகாரி

நெல்லை, வண்ணார்பேட்டை அரசு சுற்றுலா மாளிகை தாமிரபரணி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ளது. அதன்படி, தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக வெள்ளப்பணிகளை மேற்கொள்ளுவதற்காக தமிழ் வளர்ச்சித் துறை அரசு செயலாளரும், நெல்லை மாவட்ட கண்காணிப்பு அதிகாரியுமான செல்வராஜ் சுற்றுலா மாளிகையில் தங்கி அனைத்து பணிகளையும் கண்காணித்து வந்தார். இந்தநிலையில், அதிகனமழை காரணமாக பாபநாசம் சேர்வலாறு மணிமுத்தாறு அணைகளில் இருந்து ஒரு லட்சம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டதால் சுற்றுலா மாளிகை முழுவதுமாக மழைவெள்ளம் சூழ்ந்தது. இதனையடுத்து ஐஏஎஸ் அதிகாரி செல்வராஜ் மற்றும் அங்கிருந்த ஊழியர்கள் உள்ளிட்ட 23 பேரை தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்பு படையினர் படகு மூலம் பாதுகாப்பாக மீட்டனர்.

## சமூக வலைதளங்களில் உதவி கோரலாம்

கனமழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் நிவாரண உதவிகள், மருத்துவ உதவிகள், மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட உதவிகளுக்கு தமிழக அரசின் வாட்ஸ் அப் எண்: 8148539914, டிவிட்டர் : username - @tn_rescuerelief,@tnsdma, முகநூல்: @tnsdma என்ற வலையதளங்கள் மூலமாக தெரிவிக்கலாம்

## 4 மாவட்டங்கள் துண்டிப்பு... முதல் பக்க தொடர்ச்சி

▶ செந்தூர் எக்ஸ்பிரஸ் ரயில் பயணிகளுடன் ஸ்ரீவைகுண்டம் ரயில் நிலையத்தில் வெள்ளத்தில் சிக்கி உள்ளது.

### களத்தில் மாநில, தேசிய பேரிடர் மீட்பு படையினர்

அதி கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்துக்கு மாநில பேரிடர் மீட்பு படை மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படை விரைந்து உள்ளனர். அதன் விவரம்:

| மாவட்டம் | தமிழ்நாடு படை | தேசிய படை |
|---|---|---|
| நெல்லை | 150 பேர் | 100 பேர் |
| தூத்துக்குடி | 75 பேர் | 100பேர் |

மின்சாரம் வசதி, போக்குவரத்து வசதியின்றி என அனைத்தும் துண்டிக்கப்பட்டதால் நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மற்றும் குமரி ஆகிய தென்மாவட்டங்கள் தனித்தீவாக காட்சியளிக்கின்றன. இதனால் மக்கள் வெளியே வர முடியாமல் வீட்டிற்குள் முடங்கி உள்ளனர்.

வரலாறு காணாத கனமழையால் 4 மாவட்டங்கள் மிகப்பெரிய பாதிப்புகளை சந்தித்து உள்ளன. இதன் காரணமாக, பள்ளிகள், கல்லூரிகள் , அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள், உள்ளிட்டவைகளுக்கு பொதுவிடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. 4 மாவட்டங்களில் வெள்ளத்தால் சிக்கி உள்ள மக்களை மீட்டு முகாம்களில் தங்க வைக்கவும், போர்க்கால அடிப்படையில் மீட்பு பணி மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மக்களுக்கு கிடைக்க முதல்வரின் உத்தரவின்படி, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன், தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ் ஆகியோர் கொண்ட அமைச்சர்கள் குழு பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிட்டு முழு வீச்சில் பணிகளை செய்து வருகின்றனர். இருப்பினும் தொடர் கன மழை பெய்து வருவதால் மீட்பு பணிகளை மேலும் துரிதப்படுத்த கூடுதலாக அமைச்சர்கள் எ.வ.வேலு, உதயநிதி ஸ்டாலின், ராஜ கண்ணப்பன், மூர்த்தி ஆகியோர் கொண்ட இரண்டாவது அமைச்சர்கள் குழு தற்போது களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து நிவாரண பொருட்களை வழங்கி பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்து வருகின்றனர். இதுதவிர மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழு பொதுமக்களை வெள்ள பாதிப்பிலிருந்து பாதுகாத்து, தற்காலிகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகின்றனர்.

மேற்கண்ட 4 மாவட்டங்களுக்கு இன்றும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால், இன்றும் கனமழை தொடரும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய தென் மண்டலத்தலைவர் பாலச்சந்திரன் கூறுகையில், 'கடந்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களில் 39 இடங்களில் அதிக கனமழையும், 33 இடங்களில் மிக கன மழையும், 12 இடங்களில் கனமழையும் பெய்துள்ளது. அதிகபட்சமாக காயல்பட்டினத்தில் 96 செமீ மழை பெய்துள்ளது. அடுத்து வரும் இரண்டு நாட்களுக்கு தென் தமிழகத்தில் அனேக இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு விடப்பட்ட ரெட் அலர்ட் தொடர்கிறது. இதனால் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தென்காசி, மாவட்டங்களில் இன்றும் கனமழை பெய்யும் வாய்ப்புள்ளது.இது தவிர விருதுநகர், தேனி, மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கனமழையும், நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழையும், ராமநாதபுரத்தில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யும் வாய்ப்புள்ளது.

வடகிழக்கு பருவமழையை பொருத்தவரையில் தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் கடந்த அக்டோபர் 1ம் தேதி முதல் நேற்றுவரையான காலகட்டத்தில் 44 செமீ மழை பெய்துள்ளது. பொதுவாக இந்த காலகட்டத்தில் இயல்பாக 42 செமீ மழை பெய்ய வேண்டும். தற்போது இயல்பைவிட 5 சதவீதம் கூடுதலாக பெய்துள்ளது. குமரிக் கடல் பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நீடித்து வருகிறது. இதனால் குமரிக் கடல், மன்னார் வளைகுடாப் பகுதிக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

வானிலை மாற்றம் மற்றும் காலநிலை மாற்றத்தால் தென் தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு மழை பெய்துள்ளது எதிர்பார்க்கப்படாத ஒன்று. இந்த காலநிலை மாற்றம் காரணமாக இனி வரும் காலங்களில் தென் மாவட்டங்களில் பிற மாவட்டங்கள் போல அடிக்கடி மழை பெய்யும் என்றும் எதிர்பார்க்கலாம்' என்றார்.

## கனமழைக்கு 3 பேர் பலி முகாம்களில் 3,500 பேர்

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி

நெல்லையில் மழையால் பாதிக்கப்பட்டு பாளையங்கோட்டை பெல் பள்ளி முகாம் மற்றும் தச்சநல்லூர் தற்காலிக முகாமுக்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து நிவாரண உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். பின்னர் நெல்லை சந்திப்பு பஸ் ஸ்டாண்டில் மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு, நெல்லை மாநகராட்சி அலுவலகத்தில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:கனமழையால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் 3,500 பேர் திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சில இடங்களில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மீட்க படகு வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மழை வெள்ள மீட்பு பணிகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. பொதுமக்களுக்கு தகுந்த உணவு வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 50 ஆயிரம் பேருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உணவு வழங்கப்பட்டுள்ளது. மழை காரணமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மழைநீர் வடிந்ததும் கடைகள் திறக்கப்படும். பொதுமக்களுக்கு தேவையான பால் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய பொருட்களும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மதுரை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து பால் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடியை சந்திப்பதற்காக டெல்லி சென்றுள்ளார். அவர் பிரதமரை சந்தித்து நெல்லை உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்துவார். நெல்லை மாவட்டத்திற்கு தேவையான நிவாரண உதவிகளை முதல்வர் அறிவிப்பார். மழை, வெள்ளம் சேதம் குறித்த கணக்கெடுப்பு முடிந்த பிறகே சேத நிலவரம் தெரியவரும். ஸ்ரீவைகுண்டம் அருகே திருச்செந்தூர் செந்தூர் விரைவு ரயிலில் சிக்கியுள்ள பயணிகளை மீட்பதற்காக சூலூர் விமானப்படை தளத்தில் இருந்து உதவி கோரப்பட்டுள்ளது. அங்கிருந்து வரும் ஹெலிகாப்டர் மூலம் அவர்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அனைத்தும் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தாமாக முன்வந்து விசாரிக்க ஐகோர்ட் கிளை மறுப்பு

தென்மாவட்டங்களில் கனமழை பாதிப்பு குறித்து தாமாக முன்வந்து விசாரிக்க ஐகோர்ட் கிளை மறுப்பு தெரிவித்தது. ஐகோர்ட் மதுரை கிளையில் நீதிபதிகள் எம்.சுந்தர், ஆர்.சக்திவேல் ஆகியோர் நேற்று வழக்கம் போல வழக்குகளை விசாரித்தனர். அப்போது சமூக ஆர்வலர் கே.கே.ரமேஷ் ஆஜராகி, "தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்கிறது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. ரயில் மற்றும் வாகனப் போக்குவரத்து முடங்கியுள்ளது. பெரும்பாலான இடங்களில் வீடுகளை மழை நீர் சூழ்ந்துள்ளது. பல இடங்களில் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கவில்லை. எனவே, அரசு தரப்பில் போர்க்கால நடவடிக்கை எடுத்து மக்களின் தேவையை போக்க வேண்டும். இதுதொடர்பாக ஐகோர்ட் கிளையே தாமாக முன்வந்து பொது நல வழக்காக விசாரித்து உத்தரவிட வேண்டும்" என்றார்.

அப்போது நீதிபதிகள், "மனுதாரர் கோரிக்கை குறித்து இந்த நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்த முடியாது. தேவைப்பட்டால் மனுதாரர் பொதுநல மனுவாக தாக்கல் செய்தால் விசாரிக்க தயாராக உள்ளோம்" என்றனர்.

## 95 செ.மீ மழை பெய்ய என்ன காரணம்?

வானிலை ஆய்வாளர்கள் கூறுகையில், 'நிலநடுக்கோட்டுப் பகுதியில் இருந்து நீராவிக் காற்றை குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டு இருந்த காற்று சுழற்சி ஈர்த்ததால் மழை கொட்டித்தீர்த்தது. கடல் பகுதியில் தொடர்ந்து 30 டிகிரி செல்சியஸ் மற்றும் அதற்கு அதிகமாக வெப்பம் இருக்கும் போது அங்கு நீராவி உருவாகும் நிலை ஏற்படும். அப்போது தென் துருவத்தில் இருந்து வருகின்ற காற்று நீராவியுடன் சேர்ந்து வெப்ப காற்றாக மாறி பிறகு வெப்ப நீராவியாக மாறி வரும்போது அதை குளிர்விக்கும் வகையில் ஈரக் காற்று இணையும் போது அது மழையாக மாறும். அப்படிப்பட்ட காற்றை வங்கக் கடலில் உள்ள காற்று சுழற்சியானது ஈர்த்துவிட்டால் அதனால் மழை பொழிவு அதிகரிக்கும்.

இந்த நிகழ்வுதான் நேற்று தென் மாவட்டங்களில் நடந்தது. இதற்கு ஆதாரமாக கிழக்கு பகுதியில் இருந்து நீராவிக் காற்று குமரிக் கடல் பகுதிக்கு தொடர்ந்து வந்துகொண்டே இருந்ததால் அங்கு மழை அளவுக்கு அதிகமாக கொட்டித் தீர்த்துள்ளது. இந்தநிகழ்வு 48 மணி நேரம் நீடித்து நிலைத்து இருந்தது. இந்த காற்று சுழற்சியின் உயரம் 5800 மீட்டர்(5.8 கிமீ) இருந்தது. இதன் வேகம் 30 கிமீ வேகம் முதல் 40கிமீ வேகம்தான் இருந்தது. நிலநடுக்கோட்டுப் பகுதியில் இருந்து வந்த நீராவிக் காற்றையும் 40 கிமீ வேகத்தில் கொண்டு வந்தது. வடகிழக்கு பகுதியில் இருந்து வருகின்ற காற்றும் இந்தநீராவிக் காற்றும் மோதியதால் பலத்த மழை பெய்தது. இதனால் காயல்பட்டினத்தில் 95 செ.மீ பெய்துள்ளது. மழை பொழிவு மேலும் தொடரும் என்பதால் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்றனர்.

## 15 கிராம மக்கள் வீட்டை பூட்டிவிட்டு வெளியே வந்து விட சொல்லுங்கள்...

### தூத்துக்குடி கலெக்டர் எச்சரிக்கை

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கிராம நிர்வாக அதிகாரியிடம் பேசுகையில்: 'தாமிரபரணி ஆறுகள் ஓரமாக 2 கிலோ மீட்டர் தூரத்தில் 15 கிராமங்கள் அமைந்துள்ளது. எல்லா கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும் வெளியில் வந்து விட வேண்டும். வேறு வழியே இல்லை. ஏற்கனவே 50 ஆயிரம் கனஅடி வெளியேற்றப்பட்டுள்ளது. மேலும் அது 1 லட்சத்திற்கும் அதிகமான கனஅடி தண்ணீர் வரப்போகிறது. நிலைமை ரொம்ப மோசமாக உள்ளது. மக்கள் தூங்கிக் கொண்டு இருக்கும் போது தண்ணீர் வந்தால் ஒன்றுமே பண்ண முடியாது. வரேன், வருகிறேன் என்று யாரு சொன்னாலும் கேட்காதீர்கள். வலுக்கட்டயமாக வெளியேற்ற வேண்டும். தலைவர், வார்டு மெம்பரிடம் கூறியுள்ளேன்.

நீங்கள் அனைவரிடம் தெரிவித்து அறிவிப்பு செய்து தூங்கி கொண்டு இருந்தாலும், எழுப்பி வெளியில் கூப்பிட்டு வர வேண்டும். ஆர்.டி.ஓவிடம் வண்டி சொல்லியுள்ளேன். தேவைப்பட்டால் வண்டியை கூப்பிட்டுக் கொண்டு சென்று அனைவரையும் கூப்பிட்டு வந்து விடுங்கள். கிராமத்தில் உள்ளவர்கள் அனைவரையும் வீட்டை பூட்டி விட்டு வெளியே வந்து விடச் சொல்லுங்கள். அதன்பிறகு எங்கு தங்க வைக்கலாம், என்ன சாப்பாடு கொடுக்கலாம் என்று பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் அனைவரின் உயிரையும் காப்பாற்றுவது தான் முக்கியம். நிலைமை ரொம்ப மோசமாக உள்ளது. இதற்கு மேல் எவ்வளவு முக்கியம் என்று சொல்ல முடியவில்லை. தெரியவில்லை. அதிகபட்சமாக இன்னும் நமக்கு 4 மணி நேரம் தான் உள்ளது. 100 சதவீதம் ஊருக்குள் தண்ணீர் வரப்போகிறது' என்றார்.

**Karur Vysya Bank**
Smart way to bank

சொத்து வசூல் கிளை
எண்.1, பத்மாவதியார் ரோடு, 2வது தளம்,
(பீட்டர்ஸ் ரோடு அருகில்) கோபாலபுரம், சென்னை-600 086,
Ph: 044-28359331/32 E-mail: arbchennai@kvbmail.com

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.**

**கரூர் வைஸ்யா வங்கி லிமிடெட்-ல்** அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை **கரூர் வைஸ்யா வங்கி, மயிலாப்பூர் கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் நேரடியான சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெறவேண்டிய கடன்தொகையான **ரூ.52,90,33,093.93** (ரூபாய் ஐம்பத்து இரண்டு கோடியே தொண்ணூறு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து தொண்ணூற்று மூன்று மற்றும் பைசா தொண்ணூற்று மூன்று மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்தினை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **20.01.2024** அன்று விற்பனை செய்யப்படும் என இதன்மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர் & ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**கடன்தாரர் பெயர்: 1. M/s.கேரளா ஃபேஷன் ஜுவல்லரி,** கூட்டாளி நிறுவனம், அதன் சார்பாக அதன் கூட்டாளிகள், i) Mr.சஜித் செரியன், ii) Mr.சனில் செரியன் மற்றும் iii) Mrs.வல்சா செரியன், அலுவலக முகவரி: கடை எண்.36, TNHB காம்ப்ளக்ஸ், 180, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை-600004, **கூட்டாளி/ஜாமீன்தாரர்/அடமானதாரர்: 2.Mr.சஜித் செரியன்,** S/o.லேட் Mr.T.C.செரியன், பெத்தல், புதிய எண்.39, பழைய எண்.50, ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600034. **கூட்டாளிகள்/ஜாமீன்தாரர்கள்: 3. Mr.சனில் செரியன்,** S/o.லேட் Mr.T.C.செரியன், **4.Mrs.வல்சா செரியன்,** W/o.லேட் Mr.T.C.செரியன், இருவரது முகவரி: தி செரியன்ஸ், எண்.67, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை-600004. **ஜாமீன்தாரர் / அடமானதாரர்: 5. Mrs.தன்யா சஜித்,** W/o.Mr.சஜித் செரியன், பெத்தல், புதிய எண்.39, பழைய எண்.50, ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600034

**அசையா சொத்து விபரம்**

மத்திய சென்னை பதிவு மாவட்டம், ஆயிரம் விளக்கு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.538/1, பழைய சர்வே எண்.352, **பழைய கதவு எண்.13, முன்னர் எண்.50, புதிய எண்.39, ஸ்டெர்லிங் ரோடு, நுங்கம்பாக்கம் கிராமம், எழும்பூர்-நுங்கம்பாக்கம் தாலுகா, சென்னை-600034 என்னும் முகவரியில் 3 கிரவுண்ட் மற்றும் 1,112 சதுர அடி நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கதவு எண்.13A, ஸ்டெர்லிங் ரோடு, தெற்கு: RS எண்.538/2-ல் உள்ள நிலம், கிழக்கு: RS எண்கள்.538/2 & 538/20-ல் உள்ள நிலம், மேற்கு: RS எண்கள்.538/8 & 538/3-ல் உள்ள நிலம்.

**மேற்கண்ட சொத்தானது பின்வரும் கடன் கணக்குகளுக்காக கூடுதலாக அடமானத்தில் உள்ளது. M/s. KFJ (புரசைவாக்கம்) - 30.11.2023 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை ரூ.29,36,38,676.03 மற்றும் Mr.C.சஜித் - 15.12.2023 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை ரூ.1,92,20,107.16**

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ **15,00,00,000/-;** டேவணித்தொகை (EMD): ₹ **1,50,00,000/-;**
ஏல உயர்வு தொகை: ₹ **15,00,000/-**

சொத்துக்களை பார்வையிடும் நாள் & நேரம்: 20.12.2023 முதல் 19.01.2024 வரை காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரைஅனைத்து வேலை நாட்களிலும் சொத்துக்களை பார்வையிடலாம்.

இ-ஏல விண்ணப்ப படிவங்களை ஆன்லைனில் சமர்பிக்க வேண்டிய கடைசி தேதி & நேரம் 19.01.2024 அன்று மாலை 5.00 மணி வரை

**இ-ஏலத் தேதி மற்றும் நேரம்**: **20.01.2024** அன்று மாலை 03:00 மணி முதல் 04.00 மணி வரை விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 10 நிமிட காலவரையற்ற நீடிப்புகளுடன் இ-ஏலமானது https://www.matexauctions.com -என்ற இணையதளத்தின் வாயிலாக நடைபெறும்

Nodal Bank Account Name: The Karur Vysya Bank Ltd., Central Office Bid Collection, Account No 1101351000000973, IFSC Code: KVBL0001101, EMD for the account of M/s. Kerala Fashion Jewellery

தொடர்புகொள்ள வேண்டிய நபர் & தொலைபேசி எண்: முதன்மை மேலாளர் - 89398 69789 / 77085 35548
Gen Ph Nos. 044 – 28359331/33/34 e-Mail: arbchennai@kvbmail.com

விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: www.kvb.co.in / Property Under Auction சொத்துக்களை ஏலம் விடும் இணையதள முகவரி: https://www.matexauctions.com சேவை வழங்குனர் M/s. Matex Net Pvt. Ltd.

SARFAESI சட்டம், 2002 விதி 9(1)-ன்கீழ் 15 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு

மேற்காணும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன் பாக்கியை **20.01.2024** இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து இ-ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன்பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி, இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

தேதி : 16.12.2023
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்**
செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அலுவலகம்,
சேலம் வீட்டு வசதிப் பிரிவு, அய்யன்திருமாளிகை ரோடு, சேலம்-636 008.
தொலைபேசி எண்.0427-2401764, மின் அஞ்சல் tnhbs01bank@gmail.com

**மின்னணு ஏலம் ஒத்திவைப்பு தொடர்பான அறிவிப்பு**

சேலம் வீட்டு வசதி பிரிவுக்குட்பட்ட வீட்டுவசதி திட்டங்களில் காலியாக உள்ள வணிக மனைகள் / கடை மனைகள் / சமுதாயகூட மனைகள் / பள்ளி மனைகள் / பொது பயன்பாட்டு மனைகள் / ஆரம்ப பள்ளி மனைகள் **(மொத்தம் 101)** ஆகிய மனைகளுக்கு **24.01.2024** அன்று ஏலம் நடத்த கடந்த **08.12.2023** அன்று **"தினகரன்" நாளிதழில்** விளம்பரம் வெளியிடப்பட்டது.

நிருவாக காரணங்களை முன்னிட்டு மின்னணு ஏலம் மறு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுகிறது என்பதை தகவலுக்காக இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்,**
**சேலம் வீட்டு வசதிப் பிரிவு**

செ.ம.தொ.இ./1421/வரைகலை/2023

**கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்**
Can Fin Homes Ltd
Sponsor: CANARA BANK
HOME LOANS • DEPOSITS
Translating Dreams into Reality
CIN: L8511OKA1987PLCOO8699

செங்கல்பட்டு கிளை
மனை எண்.28, தரை தளம், லாயர் கிருஷ்ணசாமி தெரு,
வேதாச்சலம் நகர், செங்கல்பட்டு - 603 001.
தொலைபேசி : 044 - 27426466 / 76250 79168
E Mail : Chengalpattu@canfinhomes.com

**சுவாதீன அறிவிப்பு (விதி 8(1)) (அசையா சொத்துக்களுக்காக)**

கீழே கையொப்பமிட்டவர் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கின்றபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 மற்றும் மேற்கூறிய சட்டத்தின் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **04.05.2021** தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி **கடன்தாரர்களான திரு.கணேஷ் குமார்.M** மற்றும் **திருமதி.தேவி.G** ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கடன் பாக்கி தொகையான **ரூ.30,26,925/- (ரூபாய் முப்பது லட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்)** மற்றும் அதனுடன் ஒப்பந்தத்தின் படி கடன் வசூலாகும் தேதிவரையிலான வட்டியுடனான தொகையை மேற்கூறிய அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளார், இதன் மூலம் கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இதன்கீழ் விவரிக்கப்பட்ட சொத்தினை **13.12.2023** நாளில் சுவாதீனம் மேற்கொண்டுள்ளார்.

கடனீட்டு சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட சட்டம் பிரிவு 13 உட் பிரிவு (8) - ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

கடன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கையும் கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்டுக்கு **ரூ.30,26,925/- (ரூபாய் முப்பது லட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்)** மற்றும் அதற்குரிய வட்டியுடன் செலுத்துவதற்குட்பட்டது.

**அசையா சொத்தின் விவரம் :**

**(அட்டவனை "A") வகை எண்.1 :** செங்கல்பட்டு பதிவு மாவட்டம், இணை I துணை பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, செங்கல்பட்டு நகராட்சி, GST சாலை, திம்மராஜகுளம் தெரு என்ற முகவரியில் பிளாக் எண்.19, வார்டு எண்.3, பழைய டவுன் சர்வே எண். 373 & 373/1A, மற்றும் புதிய டவுன் சர்வே எண். 1076/2A-ன் படி 4529 சதுர அடி வீட்டு இடம் மற்றும் அங்குள்ள கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கடை, அளவுகள் : 45 அடி, தெற்கில் : குப்புசாமி நாயக்கர் அவர்களின் மனை, அளவுகள்: 86 அடி 9 அங்குலம், கிழக்கில் : திம்மராஜகுளம் தெரு மற்றும் பொது வழி, அளவுகள் : 73 அடி, மேற்கில் : திருமலை நாயுடு அவர்களின் வீட்டு மனை. அளவுகள்: 64 அடி 6 அங்குலம். **வகை எண்.2 :** செங்கல்பட்டு பதிவு மாவட்டம், இணை I துணை பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, செங்கல்பட்டு நகராட்சி, GST சாலை, திம்மராஜகுளம் தெரு என்ற முகவரியில் பிளாக் எண்.19, வார்டு எண்.3, பழைய டவுன் சர்வே எண். 373 & 373/1A, மற்றும் புதிய டவுன் சர்வே எண். 1076/2A-ன் படி 110 சதுர அடி பொது வழி. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : லலிதா அம்மாள் அவர்களின் சொத்து, அளவுகள் : 16 அடி 3 அங்குலம், தெற்கில் : பொது வழி, அளவுகள் : 16 அடி 3 அங்குலம், கிழக்கில் : GST சாலை, அளவுகள்: 6 அடி 9 அங்குலம், மேற்கில் : திருமலை நாயுடு அவர்களின் வீட்டு மனை. அளவுகள்: 6 அடி 9 அங்குலம். **அட்டவனை "B" :** அட்டவனை A சொத்தில் குறிப்பிட்டுள்ள மொத்த நிலத்தில் 463 சதுர அடி பிரிக்கப்படாத பங்குடன் கூடிய நிலத்தில் முதல் தளத்தில் 1305 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு எண். F-1.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அதிகாரி
கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்

நாள் : 18.12.2023
இடம்: செங்கல்பட்டு

**ICICI Home Finance**

கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா
கிளை அலுவலகம்: 2ஆவது தளம், கதவு எண். 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600045

[விதி 8(6) விதிமுறையை காண்க]

**அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **கையக சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

| வ. எண் | கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண் | தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள் | நிலுவைத் தொகை | நிர்ணய விலை | சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம் | ஏலம் நாள் & நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்வைப்புத் தொகை | | |
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) |
| 1. | ரவிசங்கர் Cr (கடன்தாரர்)<br>காஞ்சனா R<br>(உப–கடன்தாரர்)<br>கடன் கணக்கு எண்.<br>LHANC00001353020 | பிளாட் எண்.S1, இரண்டாவது தளம் மனை எண்.1, கமிஷனர் செயின்ட் தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து யூனியன் சித்தாலப்பாக்கம் அப்ரூவல் D.dis.No.7410/2003ல் அமைந்துள்ள பழைய சர்வே எண்.20/1 பகுதி, 21/1A பகுதி, 21/1B பகுதி, 21/1C புதிய சர்வே எண்.20/1D,21/1A9, பட்டா எண்.3717 பட்டா படி சர்வே எண் 20/1D2,21/7ல் அமைந்துள்ள எண்.121 நன்மங்கலம் கிராமம் அருள்முருகன் நந்தவனம் நகர், சோழிங்கநல்லூர் வட்டம், காஞ்சிபுரம். | ரூ. 36,07,004/-<br>டிசம்பர் 07, 2023 | ரூ. 28,86,188/-<br>ரூ. 2,88,620/- | டிசம்பர் 21, 2023 காலை 11.00 மணி – பிற்பகல் 03.00 மணி | ஜனவரி 05, 2024 பிற்பகல் 2.00 மணி – பிற்பகல் 03.00 மணி |

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக் இணையதளத்தில் (URL இணைப்பு– /https://BestAuctionDeal.com)** நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு/அறிவிப்பு மூலம் **ஜனவரி 04, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், கதவு எண். 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600045** இடத்தில் **ஜனவரி 04, 2024 மாலை 04.00 மணிக்குள்ளாகவோ** அல்லது அதற்கு முன்போ முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்க வேண்டும். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதி மற்றும் நிபந்தனைகள் வரையறைகள் படிவம் ஆகியவற்றை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2ஆவது தளம், கதவு எண் 20, கக்கன் தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600045** இடத்தில் **ஜனவரி 04, 2024 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **காஞ்சிபுரம்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd.– Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து கூடுதல் விவரங்களுக்கு, 9920807300 எண்ணில் **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** நிறுவனத்தையோ அல்லது எங்கள் விற்பனை & சந்தைப்படுத்துதல் கூட்டுதாரர் **நெக்ஸ்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

**நாள் : டிசம்பர் 19, 2023**
**இடம் : காஞ்சிபுரம்**

**அதிகாரப்பூர்வ அதிகாரி**
**ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**

GRIHUM HOUSING FINANCE

**க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**
(முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸீரோ ஒன் ஐடி பார்க், எஸ்ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036.
கிளை அலகு: எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004.

**மின்–ஏலம்– விற்பனை அறிவிப்பு**

**சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை**

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், **பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும்,** கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 03.01.2024** தேதியன்று மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

| | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B) | சுவாதீனத் தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை (நிர்ணயவிலையில் 10%) (F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலம் விடும் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள் நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கடன் எண்: HM/0539/H/18/100314<br>T.அசோக்குமார் (கடன்தாரர்),<br>சுசீலா தேவி (உப–கடன்தாரர்) | அறிவிப்பு தேதி:27.05.2022<br>மொத்த நிலுவைத் தொகை: 27.05.2022 தேதியின் படி ரூ.18,29,271.43/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து இருநூற்று எழுபத்தொன்று மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும் மற்றும் தொகை செலுத்தப்படும் காலம் வரையிலான ஆண்டு 14.00% வட்டிவீதத்திலான வட்டி. | கையக | காஞ்சிபுரம் மாவட்டம், சோளிங்கநல்லூர் வட்டம், மடிப்பாக்கம் கிராமம், பொன்னியம்மன் கோயில் தெரு, பல்லவ் பிளாசா, மடிப்பாக்கம், சென்னை -600 091, மனை எண்.73 சி, பழைய சர்வே எண். 221/2, புதிய சர்வே எண்.221/2a1a1a/1a1b இல் அடங்கியுள்ள 2429 ச.அடியில் பிரிக்கப்படாத பங்காகிய 329.5 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள பிளாட் எண்.F2–, முதல் தளம் மற்றும் 410 ச.அடி அடித்தள பரப்பளவு உள்ள அனைத்துத் துண்டுகளும் பகுதிகளும் அடங்கிய கடனீட்டு நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. | ரூ.18,08,100/– (ரூபாய் பதினெட்டு இலட்சத்து எட்டாயிரத்து நூறு மட்டும்) | ரூ.1,80,810/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்) | 02.01.2023 மாலை 5.00 மணிக்குள் | ரூ.10,000/– | 27.12.2023 (11 AM– 4 PM) | 03.01.2024 (11 AM –2 PM) | ஒன்றுமில்லை |

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்திபட வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.63, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: வினோத் சௌகான், மின்னஞ்சல் முகவரி: delhi@c1india.com, தொடர்பு எண்.9813887931 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். **ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை** (EMD) NEFT/RTGS/DD மூலமாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வங்கிக் கணக்கில், ICICI BANK LTD, கணக்கு எண்.000651000460 மற்றும் IFSC Code– ICIC0000006, 20,R.N. Mukerjee road, Kolkatta–700001 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 02.01.2024 அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **எண்.5, ஏ பிளாக், இரண்டாவது தளம், ஆர்ஜே பிளாசா, விருதம்பட்டு, காட்பாடி பிரதான சாலை, வேலூர்–632004 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும் கைபேசி எண். +91 8588802671 மற்றும் +91 9567626050 மின்னஞ்சல் முகவரி rahul.r1@poonawallahousing.com.** தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும். கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

நாள்: 19.12.2023
இடம்: சென்னை

ஒம்/-அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனவல்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)